மாநிலத்தின் பெருமைமிகு வளர்ச்சியை பிற மாநிலங்களுக்குச் சொல்லட்டும்!

ஆளுநரின் புளித்துப்போன அறிவுரைகள் தமிழ்நாட்டுக்கு தேவையில்லாதது!

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதில்!

சென்னை, ஜூன்.7- தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி உண்மைக்கு மாறாக ஆளுநர் அவர்கள் பேசியிருக்கிறார். அவரின் இத்தகைய புளித்துப்போன அறிவுரைகள் இன்றைய தமிழ்நாட்டுக்கு தேவையில்லாதது, பொருத்தமில்லாதது என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள அளிக்கையில் பதிலடி தந்துள்ளார்.

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

நாட்டிலேயே அதிக அளவு தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் கொண்டுள்ளது தமிழ்நாடு. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ளதும் தமிழ்நாடுதான். நிர்வாக திறன் சார்ந்த குறியீடுகளில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக முதலீடுகள் இங்கே குவிந்த வண்ணம் உள்ளன.

தொழில் சூழலில் தமிழ்நாடு மூன்றாவது இடம்!

அதேபோல அதிக அளவு தொழில் சார்ந்த பயன்பாட்டிற்குரிய நிலங்கள் கொண்ட வளமான மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. மின்மிகை மாநிலமாகவும் உள்ளது. நாட்டிலேயே திறன் வாய்ந்த மனித வளம் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களில், 50% பேர் தமிழ்நாட்டில் மட்டும் வேலை செய்கிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

உலக அளவில் சிறந்து விளங்கும் Fortune 500 என்று சொல்லக்கூடிய 500 நிறுவனங்களில், 130 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. தொழில் செய்வதற்கு ஏதுவான சூழல் இருக்கும் மாநிலங்களில் (DPIIT's Ease of Doing Business Index) தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

ரெனோ நிஸான், ஹூண்டாய், மிட்சுபிஷி, பௌ சென் போன்ற நிறுவனங்கள் சமீபத்தில் தமிழ்நாட்டில் அதிக முதலீடுகளை செய்துள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த நற்சான்றாகும். மேலும் பல பெருநிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம் கட்டிவருகிறார்கள்.

ஆளுநர் அவர்கள் தரவுகளை சரியாக புரிந்து கொண்டு அதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அரசிடம் விளக்கம் கேட்டு பிறகு பொதுவெளியில் பேச வேண்டும். பொதுவாக மாநிலங்களுக்குள் நடைபெறும் அந்நிய நேரடி முதலீடுகளை கணக்கிடும் போது அந்நிறுவனங்களின் தலைமை அலுவலகம் எங்கு இயங்குகிறதோ அந்த மாநிலத்தின் கணக்கில் சிலர் சேர்த்து விடுகிறார்கள் ஆனால் அந்த முதலீட்டில் பெரும்பங்கு அந்நிறுவனத்தின் உற்பத்தி மையங்கள் எங்கு இருக்கின்றனவோ அங்கு தான் இறுதியில் சென்றடைகின்றன.

தமிழ்நாட்டில் அதிக அளவு உற்பத்தி மையங்கள்!

இதற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டு ஹூண்டாய் நிறுவனம். கொரியாவிற்கு அடுத்து அதிக அளவு உற்பத்தி மையங்களை தமிழ்நாட்டில்தான் இயக்குகிறது. ஆனால் ஹூண்டாய் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் ஹரியானாவில் உள்ள குருகிராம் என்ற இடத்தில் இருக்கிறது. கடினமான உற்பத்தி சார்ந்த சவால்கள் இருந்தபோதிலும் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு ஏதுவான சூழல் நிலவுவதால் அந்த சவால்களை நிறுவனங்களால் எளிதில் எதிர்கொள்ள முடிகிறது. மேல் மட்டத்தில் இருக்கும் மேலாண்மை அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் பெருநிறுவன செயல்பாடுகளை டெல்லிக்கு அருகிலேயே தலைமை அலுவலகங்களை அமைத்து தொழில்நிறுவனங்களின் தேவை மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை முன்னெடுக்க அங்கேயே முகாமிட்டு பணியாற்ற வேண்டிய தேவை இன்றும் நிலவுகிறது.

வளர்ந்து வரும் அனைத்து நாடுகளும் அதிக அளவு அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு முயற்சிப்பது இயல்பு. ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகத் துறை மற்றும் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோரும் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு அந்நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து பேசி வருகிறார்கள்.

முதலீடுகள் சார்ந்த கடுமையான போட்டிகளை கடந்து, வளர்ந்து வரும் மாநிலமான தமிழ்நாடு அந்நிய நேரடி முதலீடுகளை அதிகப்படியாக ஈர்க்க மும்முரமாக செயல்பட்டு, அந்நிறுவங்களுடன் நேரடித் தொடர்பில் இருப்பது அவசியம். தமிழ்நாடு இப்படி செயல்படுவதனால், அந்நிய நேரடி முதலீடுகளின் மூலம் தொழில் செய்வதற்கு ஏதுவான சூழலை கொண்ட மாநிலமாகவும், சிறந்த தொழில் சார்ந்த கொள்கைகளைக் வகுக்கும் மாநிலமாகவும் விளங்குகிறது.

முதல்வரே களத்தில் நின்று முதலீடுகளை ஈர்த்து வருகிறார்!

முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையே கடுமையான போட்டிச் சூழல் நிலவும் நிலையில் அந்த வரிசையில் முன்களப் போட்டியாளராக இருக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் பெருநிறுவனங்களின் நம்பகத்தன்மையைப் பெறவும் மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாக களத்தில் நின்று முதலீடுகளை ஈர்த்து வருகிறார்.

இதுவரையில் பல ஆண்டுகளாக தமிழ்நாடு சாதித்தவற்றை எங்களிடமே கூறி அரைத்த மாவையே அரைப்பது போலன்றி, ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டின் வெற்றியை மற்ற மாநிலங்களுக்கும் எடுத்துக்கூறி ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சிக்கும் பாடுபடுபவராக இருப்பதே சிறப்பு. அதுவே அனைவரது எதிர்பார்ப்புமாகும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், சைதை வார்டு 169க்குட்பட்ட வேளச்சேரி பிரதான சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு கட்டடம் மற்றும் நியாயவிலைக் கடையினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.06.2023) பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் /ஆணையாளர் பாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மண்டல அலுவலர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஓராண்டு முழுவதும் கலைஞருக்கு விழா எடுக்க தீர்மானம்!

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

சென்னை, ஜூன் 7- சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 06.06.2023 செவ்வாய்கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம். நாதன்

மாவட்ட நிர்வாகிகள்: தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், வே. வாசு, கூ.பி.ஜெயின், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர், மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

தீர்மானம் 1: ஒடிசாவில் நடைபெற்ற 3 ரயில்கள் மோதிய கோர விபத்தின் காரணமாக தலைமைக் கழகம் சார்பில் ஜூன்3 அன்று நடைபெறவிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்ட நிலையில், அன்றைய தினம் நடைபெறவிருந்த அனைத்து கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டமும் தள்ளிவைக்கப்பட்டது.

அதனை மீண்டும் ஜூன் 7 புதன்கிழமையன்று நடத்திட அனுமதி அளித்த கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம் 2: முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு துவக்க விழாவை முன்னிட்டு (ஜூன்7) இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் அனைத்து கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தை சீரும் சிறப்புடன் நடத்தவும், அதனைத் தொடர்ந்து, முத்தமிழறிஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும், ஓராண்டு முழுவதும் எடுத்துரைக்கும் வகையில் நிகழ்ச்சிகளை வடிவமைத்து செயல்பட உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேயர் பிரியா ராஜன் தலைமை! திரு.வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்! அமைச்சர்கள் துரைமுருகன் - பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

தமிழன் பிரசன்னா - கலாநிதி வீராசாமி எம்.பி - ப.தாயகம் கவி எம்.எல்.ஏ பங்கேற்பு!

சென்னை, ஜூன். 7 சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "களங்கள் வென்றத் தலைவர் காலங்கள் போற்றும் தலைவர்" எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் (8.6.2023 வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரத்தில் நடைபெறுகிறது.

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார்.

செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, பி.உதயசங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புனிதவதி எத்திராசன், மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி சசிகுமார், ச.அம்பேத்வளவன், கினார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், பி.சதீஷ், வ.நாமதேவன், ஆர்.ராஜராஜன், பி. இளஞ்செழியன், டி.ராஜி, இ. ஜோஸ்வா, ஜெ.சத்திய மோகன், பி.ஜெகதீஸ், ஜெ. மகிழரசன், ஆர்.ஞானசேகரன்,

த.வெங்கடேசன், ஏ.ரவி, எம்.பிரபு நிவாஸ், பி.எஸ். வள்ளல், டி.சரளா, ஆர். வசந்த், கே.பி.பிரபாகரன், எஸ்.விஜயகுமார், எம். சியோன்ராஜ், ஆர்.விஷ்ணு, எம்.மோகன்ராஜ், கே.ஆர். சதீஷ், வி.மதிமாறன், டி. சென்பகவள்ளி, அ.மகேந்திரன், ஜி.எபிநேசர், பி.சேகர், ஏ.அருள், ஜி.சீனிவாசன், எல்.போஸ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழகச் செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், சரிதா மகேஷ்குமார், கே.எஸ். ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, எஸ்.மணிமுடி, பரிதிஇளம்சுருதி, எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, புலவர்.சாமிநாகப்பன், வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட். ஆசாத், கூ.பீ.ஜெயின், சொ. வேலு, ஸ்ரீராமுலு, ஐ.சி.எப். முரளிதரன், எ.நாகராசன், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ் (எ) நீலகண்டன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, ஆ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி மற்றும் பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

74 (அ) வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறுகிறார்.

சென்னை மாநகராட்சியில் தொடர்புடைய

சேவைத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்த கூட்டம்!

ஆணையாளர் ஜெ.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன்.7- பெருநகர சென்னை மாநகராட்சியில் தொடர்புடைய சேவைத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், தலைமையில் நேற்று (06.06.2023) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் பிற சேவைத் துறைகளான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கற்று வாரியம், நீர்வளத் துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம், மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியம், பெருநகர சென்னை போக்குவரத்து காவல்துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தென்னக இரயில்வே ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி மற்றும் திட்டப்பணிகளை தொய்வில்லாமல் விரைவில் முடிக்கவும், ஏதேனும் குறைகள் காணப்படின் அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து பணிகளை விரைவில் முடிக்க உறுதுணையாக இருக்க வேண்டும்.

மக்களுக்கான திட்டப்பணிகள் குறித்த காலத்தில் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தொடர்புடைய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், முதன்மைச் செயலாளர்/ சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு) எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.பி. அமித், (தெற்கு), தலைமைப் பொறியாளர்கள், பிற துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

110வது வட்ட கழக முன்னோடி

சோ. பழனியப்பன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 7 சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 110-வது வட்டத்தைச் சார்ந்த கழக மூத்த முன்னோடி சூரைக்குடி சோ. பழனியப்பன் (மு.அ. தலைவர், மு. பகுதி பிரதிநிதி, மு. மாவட்ட பிரதிநிதி) கழகத்தில் தீவிரமாக பணியாற்றியவர்.

சோ.பழனியப்பன் அவர்கள் 6.6.2023 மாலை 6.10 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது இறுதி ஊர்வலம் 7.6.2023 மாலை 4.30 மணியளவில் சென்னை-31, சேத்துப்பட்டு, அப்பாசாமி தெரு, ஆரிங்டன் ரோடு, 6-வது அவென்யூவில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு வேலங்காடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

அன்னாரது மறைவுச் செய்தியறிந்து கழகத்தினர் ஏராளமானோர் சென்று அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அரபிக்கடலில் உருவாகும் பைபர்ஜோய் புயல்!

சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூன் 7 - அரபிக்கடலோரம் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுவடைந்து புயலாக உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. அரபிக்கடலில் உருவாகும் புயலுக்கு பைபர்ஜோய் புயல் என்று பெயர் வைக்கப்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது வடக்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து தென்கிழக்கு மற்றும் அதை ஒட்டிய கிழக்கு மத்திய அரபிக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலமானது மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்று புயலாக உருவானால், அதற்கு "பைபர்ஜோய் புயல்" என்று பெயர் வைக்கப்படும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கேரளா, தமிழ்நாட்டில் வழக்கமாக ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை தொடங்கி விடும். ஜூன் 6ம் தேதி ஆன நிலையில் இதுவரை தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான அறிகுறியே தென்படவில்லை. இந்த நிலையில் அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஏற்பட்டுள்ளதால் ஒருசில நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரம், அரபிக்கடலில் உருவாகியிருக்கும் காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் அடுத்த 3 நாட்களில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகரம் நாம் தமிழர் கட்சியின் நகரக் கழகச் செயலாளர் தங்கராஜ் தலைமையில் அக்கட்சி நிர்வாகிகள் பா.கார்த்திக், தளசிதரன், சு.திலீப்குமார், முத்துராமலிங்கம், லோகநாதன், ப.செ.காருனிஸ்வரன், சித்துராஜா, த.சிவகுமார், கார்த்திகேயன், ஹரி பிரசாத், மோஹன், பாபு, செண்பக பாண்டியராஜன், ஸ்ரீனிவாசன், செ.சௌந்தர், ஹேமநாத், ஜெ.ராகேஷ், தினேஷ்குமார், ஆதித்யன், வெற்றிய செல்வன், பவித்ரா உள்பட 20க்கு மேற்பட்டோர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி திருநின்றவூர் நகரக் கழக செயலாளர் தி.வை.இரவி ஏற்பாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள் இதில் திருநின்றவூர் நகராட்சி மன்ற தலைவர் உஷாராணி ரவி உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கழகத் தொண்டர் எம்.ஜோசப் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 7- ஆயிரம் விளக்கு பகுதி, குலாம் அப்பாஸ் அலிகான் தெரு, சென்னை 6ல் வசித்து வந்த தி.மு.கழகத்தை வளர்த்தவரும், அண்ணா அறிவாலயம் முன்னாள் தி.மு.க. தலைமைக்கழகச்செயலாளர் ஆ.த.சதாசிவம், மற்றும் சைதாப்பேட்டை கூட்டுறவு வங்கி ஜி.மகாலிங்கத்தின் சகோதரரருமான எம். ஜோசப் அவர்கள் 4.6.2023 அன்று மதியம் 1.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

ஆயிரம் விளக்குப் பகுதியில் தி.மு.க.வின் தீவிரத் தொண்டனாக பணியாற்றிய எம்.ஜோசப், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் மீதும், கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் அளவற்ற பாசமும், மரியாதையும் வைத்து கழகப் பணியாற்றியவர்.

மறைந்த எம்.ஜோசப் அவர்களின் இறுதி ஊர்வலம் 05.06.2023, திங்கள் கிழமை மாலை 4.00மணிக்கு மேல் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறைந்த அன்னாரது உடலுக்கு கழக நிர்வாகிகள் ஏராளமானோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கம்!
கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

2023 ஜூன் 10	-	அரியலூர்
11	-	பெரம்பலூர்
17	-	மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்
20	-	திருவாரூர்
21	-	திருபுவனம் - தஞ்சை வடக்கு மாவட்டம்
22	-	கும்பகோணம்
23	-	அம்மாபேட்டை
24	-	வேலூர் - வேலூர் மாவட்டம்
ஜூலை 1	-	தென்காசி தெற்கு மாவட்டம்
2	-	தென்காசி தெற்கு மாவட்டம்
3 காலை	-	திருநெல்வேலி மாநகரம்
3 மாலை	-	தென்காசி வடக்கு மாவட்டம்
4	-	தென்காசி வடக்கு மாவட்டம்
6	-	பட்டுக்கோட்டை - தஞ்சை தெற்கு மாவட்டம்
7 காலை	-	அம்மாபேட்டை - திருமணம்
7 மாலை	-	புதுக்கோட்டை - பொதுக்கூட்டம்

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.